விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 வைகாசி 13 ஷபா 3 இதழ் 103

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 27—5—82

# உண்ணாவிரதம் முடிந்தது!

## பகிஷ்கரிப்பு: திங்கள் முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் உண்ணாவிரதத்தை திரு. விமலராசாவின் தாயார் திருமதி அப்புலிங்கம் நேற்றுப் பி பகல்நான்குமணிக்குப்பழரசம்வழங்கி முடித்துவைத்தார்.

யாழ். பல்கலைக்கழக நிர்வாக ஊழியர்களும் பழரசம் வழங்கினார்கள்.

வகுப்புக்களை தொடர்ந்து பகிஷ்கரிப்பதா இல்லையா என்பது குறித்து திங்கட்கிழமை மாணவர் அவை கூடித் தீர்மானிக்கும். [மா]

## மூன்றுமாணவர் ஆஸ்பத்திரியில் அனுமதி

[யாழ்ப்பாணம்]

உண்ணாவிரதப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மாணவர்களில் மூவர் கடுமையாகப் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாணவர்களான கே குமார், எஸ். ஜெயரட்ணராசா, செல்வி விமலேஸ்வரி ஆகியோரே மயக்கமுற்று பாதிக்கப்பட்டவர்களாவர். [மா]

## துப்பாக்கியால் சுட்டுவிட்டு ஓடியபோது

# உமாமகேஸ்வரன் கைது!

சென்னை, மே 26

இலங்கையில் தடை செய்யப்பட்ட இயக்கத்தைச் சேர்ந்தவரென்று சந்தேகிக்கப்பட்ட க. உமாமகேஸ்வரன், நேற்று சென்னை பொலிசாரினால் கைது செய்யப்பட்டார்.

பொலிஸார்மீதுதுப்பாக்கிப் பிரயோகம் செய்து தப்பிஓட முயன்றபோது உமாமகேஸ்வரனை பொலிஸார் மடக்கிப் பிடித்தனர் என்றும் இச்சப்பவத்தில் இருவர் காயமடைந்தனர்என்றும் இந்தியப்பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

சென்னையிலிருந்து பாண்டிச்சேரி நோக்கி உமாமகேஸ்வரன் சென்றுகொண்டிருந்தபோது, தமிழ்நாடு இரகசியப் பொலிசாரும் பின்தொடர்ந்து சென்றனர் என்றும் ஒரு கட்டத்தில் உமாமகேஸ்வரன், பொலிசார் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்து தப்பி ஓடமுயன்றபோது பொலிசார் மடக்கிப் பிடித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

உமாமகேஸ்வரன் கைதுசெய்யப்பட்டதை இலங்கைப் பொலிசார் உத்தியோகபூர்வமாக அறிவிக்காதபோதிலும் கைதானவர் உமாமகேஸ்வரன்தான் என்பதை இலங்கைப் பொலிசார் ஊர்ஜிதம் செய்துள்ளனர்.

## திருவாரூர் தேர் அசைந்தது

சென்னை, மே 26

திருவாரூர் தேர் நான்காண்டு இடைவெளிக்கு பின்னர் இன்று ஓடியது. இத்தேர்த்திருவிழா வைபவத்தில் தமிழ்நாடு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு. ஆர், எம். வீரப்பனும் கலந்துகொண்டார். (வெ)

## நஷ்டஈடு:

## ரூ. 2,26,27,986

## அமைச்சரவை அங்கீகாரம்!

(கொழும்பு)

யாழ். நகரில் கடந்த ஆண்டு மாவட்ட சபைத் தேர்தல் காலத்தில் இடம்பெற்ற வன்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவது குறித்து ஆராய்ந்த 'லயனல் குழு' அரசுக்குச் சிபார்சுசெய்துள்ள 2 கோடியே 26 லட்சத்து 27 ஆயிரத்து 986 ரூபா 30 சதத்தையும் நஷ்டஈடாக வழங்குவதென்று அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

தீக்கிரையாக்கப்பட்ட யாழ் நூலகத்திற்கு மட்டும் ஒரு கோடியே இரண்டு லட்சத்து 14 ஆயிரத்து 6 0 ரூபா நஷ்டஈடாகக் கிடைக்கவுள்ளது. (ம)

## யாழ்.பல்கலைக்கழக வளவில் நிகழ்ந்த தாக்குதல் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் உண்ணாவிரதப் போராட்டத்தின் இறுதி நாளான நேற்றுக்காலை நிகழ்ந்த ஒரு சம்பவத்தில், ஒருவர் மாணவர்களின் தாக்குதலுக்குள்ளானார்!

யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் உண்ணாவிரதப் போராட்டத்தின் இறுதி நாளான நேற்றுக்காலை எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பணியகத்தில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது பல்கலைக்கழக வளவுக்குள்ளும் வெளியிலும் மாணவர்கள் உட்பட ஏராளமானோர் குழுமிநின்றனர். அந்த நேரம் பல்கலைக்கழக உள்வாசலில் நின்ற இனம் தெரியாத ஒருவர் மீது சந்தேகப்பட்ட மாணவர்கள் சிலர் அவரைச் சோதனையிட்டபோது அவரிடம் கைத்துப்பாக்கி இருந்ததுகண்டு ஆத்திரம்கொண்டு தாக்கினர். மாணவர்களின் கடுமையான தாக்குதலுக்குள்ளான இவர், மாணவர்களினால் தூக்கிச்செல்லப்பட்டு யாழ். பல்கலைக்கழகத்துக்குவெளியேவிடப்பட்டார்.

இச்சந்தர்ப்பத்தில் அவர் வைத்திருந்த அடையாள அட்டை, கைத்துப்பாக்கி, கைக்கடிகாரம், சிறுதொகைப் பணம் தவறிவிட்டது. அடையாள அட்டையும், கைத்துப்பாக்கியும் அனாதரவான நிலையில் கண்டெடுக்கப்பட்டு பல்கலைக் கழக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

தாக்குதலுக்குள்ளானவர், எதிர்க்கட்சி முதல்வரின்மெய்ப்பாதுகாவலர் என்று பின்னர் தெரியவந்தது. நேற்றுக் காலை துணைவேந்தருடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் திரு. அ. அமிர்தலிங்கம், பண்டிதர் கா. பொ. இரத்தினம். திரு. வெ. யோகேஸ்வரன் இளைஞர் பேரவையைச் சேர்ந்த திரு. மாவை சேனாதிராசா உட்பட தமிழர் விடுதலைக் கூட்டணி முக்கிய உறுப்பினர்களும் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் சிலரும் கலந்துகொண்டனர். (மா)

ஆரம்பம்: 28-05-82 (நாளை)
வெள்ளிக்கிழமை முதல்

G.C.E.A/L தூய பிரயோக கணித வகுப்புக்கள்

ஆசிரியர் ரவிமோகன்

இவருடைய வகுப்புக்கள் இன்றுமுதல்
மற்றைய நிறுவனங்களில்
நடைபெறமாட்டாது.

ஆசிரியர் ரவிமோகனது வகுப்புகள்
இனிமேல் பின்வரும் முகவரியில் நடைபெறும்

மணியம்ஸ் பில்டிங்

ஸ்ரான்லி வீதி -- யாழ்ப்பாணம்

(ஸ்ரீதர் சினிமா-நாகவிகாரைக்கு இடையில்
அமைந்துள்ளது. சிறும்பியடி ஒழுங்கை)

3342

# 'எமது இளைஞர்களை விடுவிக்க வாய்ப்புக் கிடைத்துள்ளது''

## மாணவர் போராட்டம்: 'அமிர்' அறிக்கை

(யாழ்ப்பாணம்)

''எமதுமாணவர்கள்எமது இனத்தைப் பாதிக்கும் ஒரு விஷயத்தையொட்டிப் போராட்டம் நடத்துகின்றனர். அவர்கள் கோரிக்கை வெற்றி பெறுவதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி விமலராஜாவையும், வேறு பல இளைஞர்களையும் விடுவிக்க ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. அதைத் தவறவிடாது உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாணவர் இயக்கங்களை கேட்டுக்கொள்கிறோம்.''

எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகமுமான திரு. அ.அமிர்தலிங்கம் நேற்று விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அறிக்கையின் முழுவிபரமும் வருமாறு!

''தமிழ் இளைஞர்கள் பலர் கைதுசெய்யப்பட்டு மாதக்கணக்கில் விசாரணையின்றி அடைத்து வைக்கப்படுவதையொட்டி நாங்கள் பலதடவை பாராளுமன்றத்தில் குரல் எழுப்பினோம். பல்கலைக்கழக மாணவன் விமலராஜா, சிவச்செல்வம் போன்றபலர் கைது செய்யப்பட்டதையொட்டி 1981 மே 6ம் திகதி நான் விரிவாசப் பாரராளுமன்ற ஒத்திவைப்புப் பிரேரணையில் பேசினேன். சென்ற மார்ச் மாதம் 25ந் திகதி இதே பிரச்னையைப் பண்டிதர் கா. பொ. இரத்தினம் மீண்டும் பாரளுமன்றத்தில் கிளப்பினார்.

''சென்றவாரம் தமிழர்விடுதலைக் கூட்டணி அரசாங்கத்தோடு நடாத்திய பேச்சுவார்த்தையின் போது விமலராஜாவையும் அதே போல நீதிவிசாரணையின்றிக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களையும் விடுதலைசெய்யவேண்டும் அல்லது நீதிமன்றத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று வற்புறுத்தினோம். இதையொட்டி ஆலோசித்துப் பதில் தருவதாகக் கூறிய ஜனாதிபதி, அடுத்தநாள் அவரைச் சந்தித்தபோது நான் ஒவ்வொருவடைய விடயத்தையும் ஆராய்ந்து விடுதலைசெய்யக்கூடியவர்களை விடுதலைசெய்ய நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறினார். ஆனால், பல்கலைக்கழகப் பகிஷ்காரம் நடந்துகொண்டிருக்கும்போது பயமுறுத்தலுக்கு அரசாங்கம் அடிபணியமுடியாதுஎன்றுகூறினார்.

### மாணவர் தலைவரைச் சந்தித்து விளக்கினோம்

இதை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் எடுத்து விளக்கி அவர்களுடைய ஆலோசனையோடு மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்காகவே அவர்களைச் சந்திக்க ஏற்பாடுசெய்தோம். இதை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த மாணவர் பேரவைத் தலைவரையும் நேற்றுச்

(8ம் பக்கம் பார்க்க)

## சிவகுமாரை விடுதலை செய்ய சட்டமா அதிபர் பணிப்பு

(கொழும்பு)

மாலினி மகேந்திரனின் மர்ம மரணம் தொடர்பாக நடைபெற்ற மரணவிசாரணையில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ள செல்லத்துரை சிவகுமாருக்கு எதிராகப் போதிய சாட்சியங்கள் இல்லாதமையினால் அவரை விடுதலை செய்யுமாறு கிளிநொச்சி நீதிபதிக்கு சட்டமா அதிபர் பணிப்புரை வழங்கியதை அடுத்து கொழும்பு அப்பீல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த ஆட்சொணர்வு மனு வாபஸ்பெறப்பட்டது.

சட்ட மாஅதிபரின் பணிப்புரைபற்றி பிரதி சொலிஸிஷ்டர் ஜெனரல் திரு. பிரியந்த பெரேரா அப்பீல் நீதிமன்றத்தில் நேற்றுத் தெரிவித்ததை அடுத்தே ஆட்கொணர்வுமனு வாபஸ் பெறப்பட்டது.

### இன்று ஆஜர்

இதேவேளையில், றிமாண்டில் வைக்கப்பட்டிருக்கும் எஸ். சிவகுமார் இன்று கிளிநொச்சி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவார். (ம-இ)

# வரி விளம்பரம்

## தேவை

காரைநகர் துறைமுகம் சித்திரக்கூட சித்திவிநாயகர் ஆலயத்திற்கு புதிய சித்திரத்தேர் ஒன்று செய்வதற்கு உத்தேசித்து உள்ளோம். தகுதியானவர்கள் இதற்குமுன் தேர் செய்த விபரங்களுடன் கீழ் காணும் முகவரிக்கு31-5-82க்கு முன் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். க. சோமசேகரம், சோமன்ஸ், கருங்காலி, காரைநகர். 3322

எமது ஸ்தாபனத்தில் நிர்வாகஸ்தராகவும், பங்குதாரராகவும் வேலைசெய்வதற்கு ஐந்து இளைஞர்கள் தேவை. விண்ணப்பிக்க: Trade and Management Services, 72காரைநகர்வீதி, யாழ்ப்பாணம். 3309

யாழ். நகரில் பிரபல கல்வி நிறுவனம் ஒன்றிற்கு காசாளர்கள் தேவை 31-5-1982 இற்கு முன் விண்ணப்பிக்கவும். (இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்) விளம்பர இல:3305 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 3305

எழுத்துக் கோப்பவர் தேவை.
யாழ் புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்துக்கு எழுத்துக் கோப்பவர் தேவை. முழுப் பெயர், முகவரி, வயது, எழுத்துக் கோக்கும் மொழி/மொழிகள், தொழில் அனுபவம் ஆகிய விபரங்களைத் தெரிவித்து 10-6-82க்கு முன் எழுத்தில் விண்ணப்பிக்குக. அதிபர், புனிதவளன் கத்தோலிக்க அச்சகம், த. பெ. எண் 2, யாழ்ப்பாணம். 3333

நல்லநிலையிலுள்ள, சவுக்காரத்தொழிற்சாலைக்குரிய இயந்திர உபகரணங்கள் தேவை. தொடர்பு: மல்ரி சேவிசஸ், த டன்லப் ஸ்ரோஸ், 234, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3321

## விற்பனைக்கு

திருநெல்வேலி கிழக்கு இராசபாதை வீதியின் இருபுறமுமாக 3 துண்டுகள் 2 1/2, 4, 4 பரப்பு வீதம் உடன் விற்பனைக்கு உண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். N. ஜெயரத்தினம், வாசிகசாலையின் அருகாமையில், கல்வியன்காடு, யாழ்ப்பாணம். தொலைபேசி இலக்கம்: 8302. 3325

## வாடகைக்கு

நாவலர் வீதி, கனகரத்தினம் வீதிச் சந்தியில் மின்சார வசதியுள்ள பெரிய வீடு உடனடியாக வாடகைக்கு கொடுக்கப்படும். தொடர்பு: பழைய எண்: 449, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 3304

## பயிற்சி

வெல்டிங் மோட்டார் மெக்கானிசம் வயறிங் [செய்முறை அறிமுறையுடன் புதிய வகுப்புகள் ஆரம்பம் 29-05-82 J. E. C. 33 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம், புகையிரதக்கடவைக்கு அருகில். 3313

## விபத்தில் 26 பேர் காயம்

சென்னை மே. 26
செங்கல் பட்டில் இருப்புக் கம்பிகள் ஏற்றி வந்த லொறியும் பஸ் ஒன்றும் மோதியதால் 26 பேர் காயமடைந்தனர். (க)

# இன்றைய பலன்

வைகாசி மாதம் 13ம் திகதி

வியாழக்கிழமை

(27—5—82)

மேடம்: செய்தொழிலில் சிறப்படைவதற்கு இடமுண்டு. புதிய கண்டுபிடிப்புகளும் இடம் பெறும், பொறியியலாளர்களுக்கு சிறப்பான தினம். சிலருக்கு அரசினர் விருந்தும் கிடைக்கலாம்.

இடபம்: அதிர்ஷ்ட லாபங்களுக்கும் இடமுண்டு. வியாபாரத்துறையில் அதிக வருமானம் கிடைக்கும். பயன்தரக்கூடிய உடன்படிக்கையொன்றும் கைச்சாத்திடப்படலாம்.

மிதுனம்: நெருங்கிய நண்பர் ஒருவரைப் பகைத்துக் கொள்ள நேரிடலாம். பிள்ளையொன்றின் உடல் நலம்பாதிக்கப்படும். எதிலும் அவசரக் கோலத்தை தவிர்க்கவும்.

கடகம்: ஆசை வார்த்தைகளின் மூலம் உங்களிடமிருந்து அகப்பட்டதைச் சுருட்டுவதற்குச் சிலர் முனைவார்கள். இனந்தெரியாத வேதனையல் தாக்கப்படுவீர்கள்.

சிங்கம்: பெரிய இடத்துச் சினேகிதம்இன்று ஏற்படலாம். புதிய வழிகளின் மூலம்பணம் கிடைக்கும். குடும்பத்திலும் மகிழ்ச்சிக்கு இடமுண்டு.

கன்னி: நினைத்தது நடக்காது. நிம்மதி பிறக்கும். நெடும் பயணம் வேண்டாம். பொருள் தவறக்கூடும். அதிக சிந்தனையைத் தவிர். சுமாரான தினம்.

துலாம்: இதய பாரம் நீங்கும். நன்மையான திருப்பங்கள் ஏற்படும். மாதுரு வழியாலும் பெரும் வரவுக்கு இடமுண்டு. மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும்.

விருச்சிகம்: தெளிந்த மனம் தெய்வசிந்தை தேடியது கிடைக்கும். அமைதியுடன் ஆனந்த வாழ்வும் உண்டு. இறை நம்பிக்கையுடன் இல்லத்தில் அமைதி நிலவும்.

தனு: கருத்தினில் கர்வம் தோன்றும். விரக்தி மனப்பான்மை தலைதூக்கும். வாழ்க்கையிலும் சிரமங்கள் தோன்றக்கூடும் தினமாகும்.

மகரம்: பெண்களுடனான தொடர்புகள் பெருகும். பிரமச்சாரிகள் வாழ்க்கையில் காதல்கணை தாக்கும். கவர்ச்சிப் பொருட்களில் அதிக ஆர்வம் ஏற்படும்.

கும்பம்: அதிக அலைச்சல் உங்களுக்கு எரிச்சலைத்தரலாம். தொழில் துறையில் வருமானம் மிகவும் மட்டாகவே இருக்கும். நண்பர்களின் ஆசை வார்த்தைகளில் மயங்க வேண்டாம்.

மீனம்; தரும காரியங்களில் தாராளமாக ஈடுபடுவீர்கள். சுற்றுடலில் மதிப்பு உயரும், புண்ணிய ஸ்தலமொன்றுக்கு யாத்திரை மேற்கொள்ளப்படும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் அறிவித்தல்

மரணசாதனமின்றி மரணித்த யாழ்ப்பாணம் திருநெல்வேலி தெற்கு இல. 105 பலாலி வீதியில் வசித்த பாலசிங்கம் மகள் வாசுகிதேவியின் மரணச்சொத்தும் பெறுமதிகளும் சம்பந்தப்பட்ட விடயத்தில்.
கார்த்திகேசு பாலசிங்கம், 105, பலாலி வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.
—மனுதார்

இல. 3664 தத்துவம்.
மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்கு மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அல் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982ம் ஆண்டு ஆனி மாதம் 11ந் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதென ஆக்கப்படாதென்பதற்கு காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1982ம் ஆண்டு சித்திரை மாதம் 27ந் திகதி.

(ஒப்பம்)
தா. குலஞானம்,
பதிவாளர்.

வரைவு
இ. சிவசுப்பிரமணியம்,
மனுதார் சட்டத்தரணி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம். 3106

## பூட்டோவின் மனைவிக்கு மீண்டும் தடை!

ராவல்பிண்டி, மே 26
தூக்கிலிடப்பட்ட முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் ஜனாப் சுல்பிகார் அலிபூட்டோவின் மனைவி ஜனாபா நஸ்ரத் பூட்டோவுக்கு பாகிஸ்தானின் வடமேற்கு எல்லை மாகாணத்தினுள் பிரவேசிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக கொள்கைகளுக்காகப் போராடிவரும் இயக்கமொன்றின் தலைவியாக ஜனாபா நஸ்ரத் பூட்டோ இருந்துவருகின்றார்.

ஜனாபா நஸ்ரத் பூட்டோவிற்கு பாகிஸ்தானின் வடமேற்கு மாகாண எல்லை நகரத்தினுள் பிரவேசிக்க அனுமதி மறுக்கப்பட்டிருப்பதோடு அங்கே வசிக்கவும் தங்கவும் கூட மறுப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது (கி)




## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோடு
1 சின்னத்தம்பி தம்பிஐயாவும்
2. பெண் அன்னமுத்துவும்
3. தம்பிஐயா மகள் வசந்தமலரும்,
புன்னாலைக்கட்டுவன்.
— வழக்காளிகள்.

எதிராக

இல ஈடு/1333
1. நாகலிங்கம் வயித்திலிங்கமும்
2. பெண் நவமணிதேவியும்
குமரகோட்டம், கோண்டாவில் மேற்கு.
எதிராளிகள்

யாழ்ப்பாண மாவட்டக் கோட்டின் 1333ம் ஈட்டுவழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி கீழ்விபரிக்கப்படும் ஆதனம் 1982ம் ஆண்டு ஆனிமாதம் 18ம் திகதி (18-6-82) வெள்ளிக்கிழமை காலை 9-30 மணியளவில் அக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதலும் வட்டியுமாக 5677/50 இன்னும் 3000/- ரூபாவிற்கு 29-2-1979 தொடக்கம் 10-11-1980 வரைக்கும் 18வீத வட்டியும் கூட்டிய தொகைக்கு முழுப்பணமும் இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும். இதன் செலவு கொடுபட்டது.

### ஆதனடாப்பு

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கும் பகுதியும் நல்லூர் கோவிற்பற்று சோண்டாவில் இறை ''அழகாத்தை தேரம்புபெரியபுலம்'' நில. பர., 3 பயிர்வகைகளும் இப்போ புதிதாக கட்டப்படும் கல்வீடும், தெற்கெல்லைக் கிணற்றில் பங்கும், தூர்வைபம் இதற்கு எல்லை கிழக்கும் மேற்கும் ஒழுங்கை, வடக்கு சின்னப்பு பொன்னையாவிற்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம், தெற்கு சீனியர் சின்னத்தம்பியின் ஆதனம், இதடங்கலிற் சொரியலாய் அரைவாசியும் அதைச் சேர்ந்தவைகளும்.

தா. க. பொன்னுத்துரை ஜே. பி.
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.

'அகிலகம்',
28/1 யாழ் வீதி,
யாழ்ப்பாணம். 3324

# சம்பத லொத்தர் அதிட்டம்

முதலாவது பரிசு: ரூ. 250,000/- அல்லது ஒரு போர்ட் '3600' ட்ராக்டரும் ஒரு 3½ தொன் சத்தியவாதி டிப்பிங் ட்ரெயிலர் சலுகை விலையிலும் மிகுதிப் பணமும்.

இரண்டாவது பரிசு: ரூபா150,000/-அல்லது ஒரு போர்ட் '3600' ட்ராக்டர் சலுகை விலையில் அல்லது குறைக்கப்பட்ட விலையில் ஹொண்டா CG 125 மோட்டார் சைக்கிளும் மிகுதிப்பணமும்,

மூன்றாவது பரிசு: ரூபா 50,000/- அல்லது குறைக்கப்பட்ட விலையில் ஹொண்டா C90 மோட்டார் சைக்கிளும் மிகுதிப்பணமும்.

**127 ஆவது மஹாஜன சம்பத சீட்டிழுப்பு**

1982 மே 31ஆம் திகதி திங்கட்கிழமை பி. ப. 5-15 மணிக்கு யாழ்ப்பாணம் அரியாலை சனசமூக நிலையம் காசிப்பிள்ளை ஸ்ரேடியத்தில் நடைபெறும். பொதுமக்கள் யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

மேற்படி பரிசுகள் தேசிய லொத்தர் சபை விதிகளுக்கமைய மாற்றப்படலாம்.

சம பெறுமதியுள்ள 100 ஆறுதல் பரிசுகள் அல்லது கிராண்ட் சாம்பியன் சைக்கிள் குறைக்கப்பட்ட விலையில்.

127வது மஹாஜன சம்பத சீட்டிழுப்பிற்கான சகல டிக்கட்டுகளும் நீல நிற பேங் காகிதங்களில் தற்பொழுதுமுதல் 31-5-82 ஆம் திகதி மாலை 5-15 மணிவரை விற்பனையிலிருந்துவரும்.

டிக்கட்டுகளின் பின்னணியில் ஒரேன்ஜ் நிறத்தில் ජාතික ලොතරැයිය என்ற வார்த்தைகள் சிங்களத்தில் முழுமையாகவோ பகுதியாகவோ காணப்படும்.

அவைகள் நீர்வரிக் குறிகள் இன்றியும் ஆனால் பாதுகாப்பு அடையாளங்களுடன் காணப்படும். டிக்கட்டுகளின் எழுத்துக்கள் யாவும் ஒரேஞ் நிறத்திலும் இலக்கங்கள் யாவும் கறுப்பிலும் இடம்பெறுவதோடு அவை பின்வரும் பிரத்தியேக அடையாளங்களைக்கொண்டவையாகவும் அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தில் அச்சிடப்பட்டவையாகவும் இருக்கும். டிக்கட்டின் வலதுபுற மேல்மூலையில் இல. 127உம், இடது புறத்தின் மத்தியில் சின்னமும், இடது புறத்தில் வெசாக் தின ஆரம்பத்தைக் குறிக்கும் படமும் காணப்படும்.

இலக்கங்கள் 01 Aயிலிருந்து 34 Zவரை 0001லிருந்து 1000 வரை I என்ற ஆங்கில எழுத்தைத் தவிர்ந்த எல்லா ஆங்கில எழுத்துக்களைக்கொண்டவையாகவும் அச்சிடப்பட்டுள்ளது.

தலைவர்,

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசீய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD

3323

# மூன்று ஆர்ஜெண்டீனா யுத்த விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டன

## பிரிட்டன் மற்றொருகப்பலையும் இழந்தது

லண்டன் மே. 26

**பிரிட்டிஷ் போர்க் கப்பல்கள்மீது குண்டுவீசிய 3 ஆர்ஜெண்டீனா போர் விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டன. பிரிட்டிஷ் நவீன நாசகாரி கப்பல் ஒன்று சேதமடைந்துள்ளதாக பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.**

போக்லண்ட்டின் போட் ஸ்ரான்லி பகுதி விமானத்தள ஓடு பாதைமீது பிரிட்டிஷ் விமானங்கள் தாக்குதல் நடத்தியபோது 2 பிரிட்டிஷ் ஹரியர் விமானங்களும், 2 ஹெலிக் காப்டர்களும் சுட்டுவீழ்த் தப்பட்டதாக ஆர்ஜன்டீனா அறிவித்துள்ளது.

போக்லண்டில் பிரிட்டிஷ் படைகள் தரையில் ரோந்து நடவடிக்கைகளை பலப்படுத்தியுள்ளன.

### 3-வது போர்க் கப்பல்

போக்லண்ட் சண்டையில் பிரிட்டன் தனது மூன்றுவது போர்க்கப்பலை இழந்திருப்பதாக பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் அறிவித்துள்ளார்.

ஆர்ஜென்டீனா தேசிய தினமான இன்று ஆர்ஜென்டீனா பெரிய விமானத் தாக்குதல் ஒன்றை நடத்தியது. இத் தாக்குதலில் பிரிட்டன் மற்றொரு நவீன நாசகாரிக்கப்பலை இழந்துள்ளது. பிரிட்டனின் 42ம் இலக்க யுத்தக் கப்பலே நாசமாக்கப்பட்டதாகும். இக் கப்பலில் 250 போர் வீரர் செல்லக்கூடிய வசதியுண்டு. ஏவுகணைகளும் இக்கப்பலில் இணைக்கப்பட்டிருந்தன.

ஆர்ஜெண்டீனாவின் 2 'ஸ்கைஹோக்' போர் விமானமும் 'மிராஷ்' விமானமும் சுட்டுவீழ்த்தப்பட்டதாக பிரிட்டன் அறிவித்துள்ளது.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருமாறு ஐ. நா பாதுகாப்பு சபையை ஆர்ஜென்டீனா கேட்டுள்ளது. போக்லண்டிலிருந்து ஆர்ஜென்டீனா துருப்புக்கள் வெளியேறிய பின்னர்தான் யுத்த நிறுத்தம் ஏற்படும் என பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தட்சர் அறிவித்துள்ளார்.

(6ம் பக்கம் பார்க்க

## 9 வருட சிறை

டாக்கா மே, 26

பங்களா தேஷ் முன்னாள் பிரதிப் பிரதமர் ஜனாப் ஜாமல்தீன் அகமட்டுக்கு 9 வருட சிறைத்தண்டனையை விசேட இராணுவ நீதிமன்றம் விதித்துள்ளது,

அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து 22 லட்சம் டொலரை பெற்றதாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

## ஆர்ஜென்டீனாவீரர்களுக்கு பிரிட்டிஷ்இராணுவவைத்தியர் சிகிச்சை அளித்தனர்

புவனர்ஸ்அயர்ஸ், மே 26

பிரிட்டிஷ் துருப்புக்கள் போக்லண்டை அடுத்துள்ள தென் ஜோர்ஜியா தீவைக் கைபற்றியதும் பிரிட்டிஷ் 'சீகிங்' ஹெலிகாப்டர்களால 'சன்ராவீ' என்ற ஆர்ஜன்டீனா நீர்மூழ்கிக் கப்பலும் மூழ்கடிக்கப்பட்டது.

இம்மூழ்கடிப்பில் சாயமுற்ற 'சன்ராவீ' சிப்பந்திகளுக்குப் பிரிட்டிஷ் இராணுவ வைத்திய சேவைப் பிரிவைச்சேர்ந்த டாக்டர்கள் சிகிச்சை அளித்தனர்.

முழங்கால் பகுதி பாதிப்படைந்த நிலையில் கைதான ஆர்ஜன்டீனா வீரர் ஒருவருக்கு சிகிசசைகள் வழங்கப்பட்டபோதிலும் அவரது முழங்காலின் கீழ்ப்பாகம் அப்புறப்படுத்தப்பட்டது.

இவ்வீரர் ஏனைய ஆர்ஜன்டீனா கைதிகளுடன் தாயகம் திரும்பியபோது செஞ்சிலுவைச் சங்கத்தினர் அவரைப்

[6-ம் பக்கம் பார்க்க]

## 1980-ம், 1981-ம் ஆண்டுக்கான

# சிறந்த நடிகர் கமலஹாசன் சிறந்த நடிகை சுபாஷினி

## தமிழ்நாடு அரசு தேர்ந்தெடுத்தது

சென்னை மே,25

1980-ம், 1981-ம் ஆண்டுக்கான சிறந்த படமாக 'வறுமையின் நிறம் சிகப்பு' என்ற படம் தமிழ்நாடு அரசினால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது

இப்படத்தில் நடித்தமைக்காக கமலஹாசனுக்கு சிறந்த நடிகருக்கான விருதுவாக தங்கப்பதக்கமும் 5,000 ரூபாவும் தமிழ்நாடு அரசினால் வழங்கப்பட்டுள்ளது,

சிறந்த நடிகைக்கான விருது 'நெஞ்சத்தைக்கிள்ளாதே' படத்தில் நடித்தமைக்காக சுபாஷினிக்கு வழங்கப்பட்டுள்ளது.

சிறந்த தயாரிப்பாளருக்கான விருது 'வறுமையின் நிறம் சிகப்பு' என்ற படத்தை தயாரித்தமைக்காக கே. பாலசந்தருக்கு வழங்கப்பட்டது.

சிறப்பும்படத்திற்கான விருது 'ஒருகை ஓசை' என்ற படத்திற்கும் சிறப்பு நடிசருக்கான விருது இப்படத்தில் நடித்த பாக்கியராஜாவிற்கு வழங்கப்பட்டது.

சிறப்பு நடிகைக்கான விருது 'துணைவி' படத்தில் நடித்தமைக்காக சுஜாதவிற்கு வழங்கப்பட்டுள்ளது,

சிறந்த இசையமைப்பாளருக்கான விருது இளையராஜாவிற்கும், சிறந்த பின்னணிப் பாடகருக்கான விருது பாலசுப்பிரமணியத்திற்கும் சிறந்த பின்னணிப்பாடகிக்கான விருது பி சுசீலா விற்கும், சிறந்த நகைச்சுவை நடிகைக்கான விருது மனோரமாவிற்கும், சிறந்த வசனகர்த்தாவிற்கான விருது 'சூருவளி' படத்திற்காக கே. ஏ. அப்பாஸுக்கும் சிறந்த ஒளியமைப்பாளருக்கான விருது அசோக்குமாருக்கும் தமிழ் நாடு அரசினால் வழங்கப்பட்டுள்ளது,

(வெ)


தங்க நகைகளுக்கும்
தங்க கட்டிகளுக்குமான
பணவசதி

த பினன்ஸ் கம்பனி
வழங்கும் மற்றுமொரு புதிய திட்டமாக
தங்க நகைகளுக்கும்,
தங்க கட்டிகளுக்குமான
பணவசதி
வழங்க முன்வந்துள்ளது உங்களுக்கு பண நெருக்கடி ஏற்படும்போது, எம்முடன் கலந்தாலோசித்து, தவணை முறையிலோ, குறிப்பிட்ட கால எல்லையிலோ, பணத்தைச் செலுத்தி உங்கள் தங்க நகைகளையோ அல்லது பவுண் கட்டிகளையோ பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:
விற்பனை முகாமையாளர்,

த பினன்ஸ்
கம்பனி லிமிட்.
249, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7680



YAMAHA

மற்றுமொரு
யமஹா
சலுகை

யமஹா
எந்நேரமும்
முன்னணியில்

இலவச பரிசோதனையும் சீராக்கமும்
Yamaha - AMW மற்றுமோர் வசதியை
அளிக்கின்றது - பரிசோதனையும்
சீராக்கமும் இலவசம்

வருடம் முழுவதும் எல்லா நேரத்திலும் உங்கள் யமஹா மோட்டார் சைக்கிளை சீர்நிலையில் வைப்பதற்கு இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்துங்கள்.

சீர் நிலைக்கும் நீடித்த ஆயுளுக்கும் ஓர் உத்தரவாதம்
இந்த இலவச சேவை எமது வியாபாரிகள் மூலமாகக் கிடைக்கின்றது:

ஜப்பான், யமஹா மோட்டார் கம்பனியின் அகில ஆசிய சேவை முகாமையாளர், உதவி முகாமையாளர் இருவரினதும் தலைமையில் ஏஎம்டபிள்யூ சேவைக் குழு இதனை மேற்கொள்கின்றது.

| | | | |
|---|---|---|---|
| 13-5-82 | குருணாகல் | 31-5-82 | அனுராதபுரம் |
| 14-5-82 | கண்டி | 2-6-82 | ,, |
| 16-5-82 | ஹட்டன் | 3-6-82 | மட்டக்களப்பு |
| 18-5-82 | பண்டாரவளை | 5-6-82 | ,, |
| 20-5-82 | இரத்தினபுரி | 6-6-82 | கொழும்பு அசோஸியேட்டட் மோட்டார் வேய்ஸ் லிமிட்டெட். |
| 22-5-82 | மாத்தறை | 8-6-82 | நீர்கொழும்பு. |
| 28-5-82) 29-5-82) | யாழ்ப்பாணம் | | |

ஏகப் பிரதிநிதிகள்:

AMW
அசோஸியேட்டட்
மோட்டார்வேய்ஸ் லிமிட்டெட்
185, யூனியன்பிளேஸ், கொழும்பு—2. தொலைபேசி: 33371-7

YAMAHA

### மணிவாக்கு

அறிவின் முதிர்ச்சி கண்களிலே விளங்கும்.
அன்பின் முதிர்ச்சி முகத்திலே கண்டுவிடலாம்.
ஆனல் மனதிலே எழும் சிற்றொலியிலே தான்
ஆன்மா விளங்குகிறது.

— லாங்பெலோ

## நமது நோக்கு

# பொதுமையறத்தில் அமைந்த சமுதாயம்

மகாத்மா காந்தியின் வாரிசு என்ற உரித்துடைய பண்டிதர் நேரு உயிர்நீத்து இன்று 18 வருடங்கள் கழிந்துவிட்டன.

மாந்தருள் மாணிக்கமென்றும் ஆசிய ஜோதியென்றும் வர்ணிக்கப்படும் ஜவஹர்லால் நேரு இறக்கும்வரைக்கும் இந்தியாவின் முதற்பிரதமராக விருந்தது அவருடைய தலைமைக்கும் அவர் தலைமை வகித்த காங்கிரஸ் கட்சிக்கும் போதிய எதிர்ப்பில்லாததை விளக்கியது.

காந்தியும் நேருவும் இந்திய விடுதலைப் போரில் தீவிரப்பட்ட காலத்திலும், சுதந்திர இந்தியா எவ்வாறு அமையவேண்டுமென்ற திட்டத்தில் அதிக கவனம் செலுத்தியது அந்த விடுதலைஇயக்கத்தின் ஒருதனித்துவமான அம்சம்.

வறுமையை ஒழித்து பொருளாதாரத்தில் ஏற்றத்தாழ்வை குறைத்து அறியாமையை ஒழித்து பொதுமை அறத்தை நிலைநாட்டுவதே இவ்விரு மகான்களின் இலட்சியமாகும்.

மகாத்மா மறைந்து இன்று 35 வருடங்கள்; நேருவின் ஆட்சி இன்றும் ஓரளவிற்கு இந்திராவின் ஆட்சியில் தொடருகிறதென்று கருதினலும், அது 1964ல் முடிவடைந்தது.

இவ்விரு பெரியார்களின் ஒன்றுபட்ட இலட்சியங்கள் இன்றைய இந்தியாவில் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கின்றன என்பது ஒரு பொருத்தமான கேள்வி; ஆனல் அதன்விடை இலகுவாகவோ சுருக்கமாகவோ கூறுவதற்கில்லை.

நவீனமயமான (Modern) சமுதாயப் போக்கில் வறுமையில் வாடும் இந்தியா நம்பிக்கை வைத்தல் நலமில்லை யென்பதே காந்தியின் பிடிவாதமான கொள்கை, சுயமுயற்சியால் விவசாயிமுன்னேற வேண்டுமென்பதும் சிக்கனமான வாழ்வே இந்திய மக்களின் விமோசனமென்பதும், செல்வர்கள் ஒப்புரவால் மற்றவர்களை கைதூக்கிவிடவேண்டுமென்பதும் மகாத்மாவின் அடிப்படைக் கொள்கைகள்.

மேனாட்டு நாகரிகம் மேனாட்டு கல்விமுறை, வாழ்க்கைமுறை, சுதந்திர இந்தியாவைப் பாழாக்குமென்பதில் அவருக்கு எள்ளளவு சந்தேகமுமிருக்கவில்லை.

சுதந்திர இந்தியாவின் சிற்பியும், முதற்பிரதமருமான நேரு இக்கருத்துக்களில் முற்றுன நம்பிக்கை கொள்ளாத போதும், விவசாயம், இந்தியாவின் தாயாக விருந்தால், தந்தையாகிய தொழில் – கைத்தொழில் மட்டுமல்ல, பெருந்தொழிலும் – இந்தியாவின் வறுமையை, வேலையில்லாமையைப் போக்கவல்ல துறைகள் எனக்கொண்டார்.

பல ஐந்தாண்டுத் திட்டங்களில் நாடு விவசாயத்திலும் தொழிலிலும் கணிசமான அளவுக்கு முன்னேறியது உலகறிந்த விடயம். ஆயினும், இந்தியாவின் பரந்து அதிகரித்த வரும் வறுமையும், வேலையின்மையும் நினைத்த அளவிற்கு குறைந்த பாடில்லை. ஜனப்பெருக்கம் ஒரு பெரும் சத்திராதியாகவிருந்தது.

பொதுமை அறம் பொலிந்த ஏற்றத் தாழ்வு குறைந்த சமுதாயம் (Socialist pattern of Society) உதயமாகும் திடமான அறிகுறியை அவர் காணமுடியாதது இறக்கும் வேளையில் ஏமாற்றம் அளித்தது.

அவருடைய இந்த இலட்சியமே இன்றும் இந்திய அரசியலில் தாக்கம் அளிக்கிறது. தந்தையின் மந்திரத்தை தாரகமாகக் கொண்ட பிரதமர் இந்திரா இந்திய ஏழை மக்களின் பட்டினி வாழ்வை ஒழிக்க கங்கணம் கட்டி வருவது அவருடைய ஆட்சிக்கு இன்றும் பலமளிக்கின்றது.

பொதுவுடைமைக் கட்சிக்கு ஆதரவளித்து வந்த கேரளமே இன்று இந்திராவின் கையில் என்றுல், நேருவின் சோஷலிச கொள்கை முற்றுக நூர்ந்துபோகவில்லையெனலாம்.

ஆயினும் ஒரு துறையறச் சமுதாயத்தின் வீறு கொண்ட வடிவு இந்திய நாட்டில் வளர்ச்சியடையுமா? என்று சந்தேகிக்கும் வகையில் முதலாளித்துவ செல்வாக்குடைய ஆட்சி நீடிக்கின்றது.

சமுதாய ரீதியில் ஏழை மக்கள் பரஸ்பர உதவியில் நம்பியிருக்கலாமா? செல்வரெல்லாம் ஊருணி போலவும், பயன்மரம் போலவும், மருந்து மரம் போலவும் மற்றவர்களுக்கு உதவுவார்கள் என்ற நம்பிக்கையில் வறுமை, வேலையின்மை ஒழியுமா?

நேரு அதில் என்றும் நம்பிக்கை கொள்ளவில்லை; சுமார் 200 லட்சம் மக்கள் இன்றும் வேலையின்மையால் வாடுகின்றனர். வறுமைப்பட்டோர் 2950 லட்சம்; சமத்துவமின்மையைக் குறிப்பிடுங்கால், 215 லட்சம் ஏக்கர் நிலம் மிகுதியாகக் காணப்பட்டு, காணியற்றவர்களுக்கு வழங்க வேண்டிய கட்டத்தில் 13 லட்சம் ஏக்கரே 1977ல் கொடுபட்டது. அதே சமயத்தில் செல்வர்களின் சொத்து அபரிமிதமாக அதிகரித்திருப்பதையும் அவதானிக்கக் கூடியதாக விருக்கின்றது.

ஏழை மக்களின் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையரென்றலும், அவர்களின் சமுதாய நல சட்டங்கள் நிர்வாகத்தினுல் நிறைவேற்றப்படுவதில்லையென்பதே இதன் ரகசியம். இந்திராவுக்குத் தெரிந்த இரகசியம் காணி, விவசாயம், கல்வியென்னும் முக்கிய துறைகளில் ஏழை மக்களின் ஏகோபித்த குரல் சட்டமாக மாறுவதுமட்டுமல்ல செயற்படுத்த வேண்டிய நிர்வாகமே இன்றைய தேவை.

# பாரதவிடுதலையுடன் உலக அமைதிக்கும் போராடியவர்

## இன்று ஜவஹரின் நினைவுதினம்

“உலகத்திலே நீண்ட காலம் நிம்மதியாக உயிர் வாழ்வதா? அல்லது நிம்மதியே அற்று உயிர் வாழாதிருப்பதா? என்ற இரு தெரிவுகளுக்கு மக்கள் முகங்கொடுக்கவேண்டிய நிலை இன்று ஏற்பட்டுள்ளது.

இன்று உலகைச் சூழ்ந்துள்ள பயங்கர நிலையை ஒழித்துக்கட்டுவதற்கு எவரும் முன்வராது நிலத்தில் பொந்துகளை அமைத்து எலிகளைப்போல அஞ்சி வாழ்வதைக் காணும்போது பெரும் துன்பமே ஏற்படுகின்றது.”

ஜவஹர்லால்நேரு
ஐ. நா. 1961

1961-ம் ஆண்டு [illegible] யோர்க் மாநகரில் அமைந்துள்ள ஐக்கியநாடுகள் ஸ்தாபானத்தின் பொதுக்கூட்டத்தில் மேற்கண்டவாறு ஜவஹர்லால் நேரு தமது உரையில் குறிப்பிட்டார்.

இந்தியாவின் பெருஞ்செல்வந்தக் குடும்பமொன்றிலே அவதரித்து ஆங்கிலேயச் சூழ்நிலையிலே தமது ஆரம்ப வாழ்நாட்களைக் கழித்த ஜவஹர்லால்நேரு அத்தகைய வாழ்க்கையிலேயே தொடர்ந்தும் தம்மை ஈடுபடுத்திக்கொள்ள விரும்பவில்லை.

ஆங்கிலேயச் சூழலில் தாம் வளர்க்கப்பட்டிருப்பதை எண்ணி நாணமும், ஆத்திரமுமடைந்தார். அச்சூழலில் இருந்தும் தம்மை விடுவித்துக்கொண்டு கதர் ஆடை தரித்து நாட்டின் விடுதலைக்கு தலைமை [illegible] நேரு அர்ப்பணித்தார். நேருவின் தந்தையான [illegible] திலால் நேரு இந்தியாவின் தலைசிறந்த வழக்கறிஞர்களில் ஒருவராக விளங்கினர். மோதிலால் நேருவின் செல்வச் [illegible] முடி [illegible] குடும்பம் தமது ஆடைகளைக்கூட சலவை செய்வதற்காக நாகரிக [illegible] பாரிசுக்கே அனுப்பி எடுப்பிப்பதுண்டாம்.

இத்தகைய சூழலிலே வளர்ந்த ஜவஹர்லால்நேரு [illegible]

பான்மையாகக் கொண்டிருந்த இந்தியாவில் தாம் மட்டும் ஆங்கிலேயரை அணைத்து அவர்களின் துணையுடன் பெரும் ராஜபோகத்தையே அனுபவித்திருக்கலாம். ஆனல் இதன்மூலம் கோடிக்கணக்கான மக்களை அடிமையாக அவர் வைத்திருக்க விரும்பவில்லை. இந்திய மக்களும் ஏனைய உலக மக்களைப்போல பூரண சுதந்திரமும், கல்வியறிவும், தேசியபற்றும் மிக்கவர்களாக வாழவேண்டுமென விரும்பி ஆங்கில ஏகாதிபத்தியத்துக்கு எதிராகக் குரல் கொடுக்க ஆரம்பித்தார்.

இந்திய நாட்டுக்கு பெரும் வழிகாட்டியாக வாழ்ந்த ஜவஹர்லால்நேரு மறைந்து இன்றுடன் 18 ஆண்டுகள் கழிகின்றன. இம்மாபெரும் தலைவரின் வாழ்க்கை இந்தியர்களுக்கு மட்டும் ஒரு முன்மாதிரியாக விளங்கவில்லை. ஆசியப் பிராந்தியத்திலே வாழ்கின்ற சகலருக்கும் ஓர் கலங்கரைவிளக்காக விளங்கியது. ஆகையினலேயே அவர் ‘ஆசிய ஜோதி’ என்று வர்ணிக்கப்பட்டார்.

ஜவஹர்லால், இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் குதித்து அதன் உயிர்த்துடிப்புக்கு ஒரு நாடியாகவிருந்தாரே தவிர, தலைமையை எதிர்பார்த்துப் போராட்டங்களை அவர் நடத்தவில்லை. தம் உள்ளங்கவர்ந்த போராட்டவீரரையெல்லாம் மதித்து நடந்தார். இவ்வகையில் நேருவின் உள்ளத்தில் நிரந்தர இடத்தைப்பிடித்துக் கொண்டவரே அவரால் ‘பாபுஜி’ என்று கனிவுடன் அழைக்கப்படும் மகா புருஷர் மகாத்மா காந்தி,

> “சுதந்திரத்தின்பால் அசைக்க முடியாத நம்பிக்கையும் வெல்ல முடியாத போராட்ட உணர்வும் கொண்டவரான ஜவஹர்லால்நேரு இளமைப்பருவத்தையும் வெற்றியின் பூரிப்பையும் பிரதிபலிக்கும் யுவராஜாவாக விளங்குகிறுர்.”
>
> கவியரசர் தாகூர்
> 1931

இந்தியரால் இந்திய மண்ணின் மீட்சிக்காக நடத்தப்படும் போராட்டத்தில் அம்மண்ணின் [illegible] வாசனையே வீச வேண்டும் என்பதில் மகாத்மா காந்தி கொண்டிருந்த கொள்கைக்கு ஜவஹர்லால்சிரம் தாழ்த்தி மதிப்பளித்தார்.

இக்கொள்கையின் வெளிபாடே சுவாமிவிவேகானந்தர், சுவாமி இராமகிருஷ்ணர் கௌதமபுத்தர் மற்றும் பெரும் தத்துவஞானிகள் அவதரித்துப்போதித்த போதனைகளின் அடிப்படையில் மகாத்மாவாலும் ஜவஹர்லாலாலும் நடத்தப்பட்ட அஹிம்சைப்போராட்டம்.

போராட்ட காலங்களில் இந்தியரின் நிலையை அடிக்கடி வெள்ளையர்களுக்கு ஜவஹர்லால் நேரு எடுத்து விளக்கிய போதெல்லாம் ஒரு பெரும் அரசியல் தத்துவஞானியாகவே அவர் விளங்கினர்.

ஜவஹர்லாலின் உரைகள் ஆங்கிலேய சாம்ராஜ்யத்துக்கு குழிதோண்டுவதாக இருந்த போதிலும் அவர் வெளியிட்ட கருத்துக்கள் அவரது எதிரிகள் மத்தியிலும் அவரைப் பற்றி உயர்வான எண்ணத்தை ஏற்படுத்திக்கொள்ளவே வழி செய்தன.

பா. அனந்தகிருஷ்ணன்

194‘ல் இந்தியா சுதந்திரமடைந்த பின்னர் ஜவஹர்லாலின் ஆளுமையின் சிறப்பு வெளிப்படத் தொடங்கியது. சுதந்திரப் போராட்டங்களிலே தமது விடுதலை உணர்வை கொட்டித்தீர்த்த நேரு சுதந்திரத்தின் பின்னர் தம் நாட்டு மக்கள் வறுமை, அறியாமை போன்றவற்றிலிருந்து மீளவேண்டுமென்பதில் தீவிர நாட்டம் கொண்டிருந்தார்.

இந்தியரிடையே பிரகாசித்துக் கொண்டிருந்த ஆத்மீக வளர்ச்சியுடன் சர்வதேச ரீதியில்நாடுமுன்னேறச்சிறந்ததிட்டங்களும் உருவாக்கப்படவேண்டுமென்பதில் அக்கறை காட்டினர் நேரு.

நாட்டு நலன்கருதி இந்தியாவின் நேசநாடான சோவியத் ரஷ்யாவுடன் கூட்டாக பல அபிவிருத்தித் திட்டங்களை முடுக்கிவிட்டார். தாம்கொண்டிருந்த அபிவிருத்தி இலக்கை மக்களும் இலகுவாகப்புரியும் வகையில் “பெரும் தொழில் ஆலைகளே நான் வணங்கும் ஆலயங்கள் என நேரு தெரிவித்தார்.

இந்தியாவின் வளர்ச்சியில் கண்ணுங்கருத்துமாக விருந்த ஜவஹர்லால் சர்வதேச அமைதிக்கும் வழிகாண முன்வந்தார்.

(5ம் பக்கம் பார்க்க)

## சேக்கிழார் பெருமான்

# அறுபத்துமூவரை உலகறியச்செய்தவர்

நாவலர் பெருமான் தான் தாபித்த வண்/சைவப் பிரகாச வித்தியாசாலையில் சேக்கிழார் பெருமான் குருபூசைக்கும் முக்கிய இடம் கொடுத்திருந்தார்.- இதுமட்டுமன்றி சிதம்பரத்தில் இருந்து பெரியபுராணத்தை இயற்றியவரும், அரங்கேற்றியவரும்சிவபதமடைந்தவருமான சேக்கிழாருக்குஅங்கு ஆலயம்இல்லாமையைக் கவனித்து ஆலயமும் அமைத்தார். சிதம்பரம்

### ‘அருளாளன்’

ஞானப்பிரகாசர் குளத்தின் அண்மையில் விளங்கும் சேக்கிழார் ஆலயத்திற்கு நாவலர் தரும பரிபாலனத்தாராலேயே நித்திய பூசை முதலியன நடத்தப்படுகின்றது. சைவத்தையும், தமிழையும் இருகண்களெனவளர்த்தநாவலர் வாழ்ந்தநாட்டில் அவரது போதனைகளைப்பின்பற்றும் யாழ்ப்பாணத்தில் சேக்கிழார் விழா சிறப்பாக அனுட்டிப்பது பெருமைப்படக் கூடியதே.

அறுபத்தமூவர்பெருமையை உலகறியச் செய்தவர் சேக்கிழார்-சித்தாந்த அட்டகம் என்ற 8நூல்களை இயற்றிய தில்லைவாழந்தணர்களுள் ஒருவரான உமாபதி சிவாசாரியாரே சேக்கிழாரை உலகறியும்படியாக சேக்கிழார் புராணத்தைப் பாடியவர்.

திருவாசகத்தைப் படித்து உருகுவதுபோல திருஞானசம்பந்தர் தேவாரத்தையும் படித்து உருகலாம் என்பதை சேக்கிழார்பெரியபுராணத்தின் மூலம் நிறுவியிருக்கின்றுர்.

சித்தாந்த உண்மைகளையும் சிவானுபவ முதிர்வுகள் என்பனவற்றையும் இலக்கியகாட்சியாக வர்ணித்த புலமை சேக்கிழாருக்கே உரிய தனிச்சிறுப்பாகும். ஒருபதிகத்தில் சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிய திருத்தொண்டர் பெருமையை 4000க்கு மேற்பட்ட பாடல்களால் பாடியும் திகட்டாமல் திரும்பத்திரும்ப கூறியதாக அலுப்புத்தட்டாமல் பாடிப சேக்கிழாரின் ஆற்றலை பிற மதத்தவர்கள் கூட வியந்துள்ளனர்.

இதுபோலப் பல சிறப்பியல்புகளை உடைய சேக்கிழார் சிறப்புக்களையும் அவரியற்றிய புராணத்தையும்பற்றி சிந்திக்கும் காலத்தைப் பேணிக் கொள்ளவேண்டும்.

# நல்லையில் சேக்கிழார்விழா இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்)

அகில இலங்கைச் சேக்கிழார் மன்றம் எடுக்கும் சேக்கிழார் குருபூசையும், விழாவும் இன்று வியாழக்கிழமை நல் லூ ரி ல் ஆரம்பமாகிறது. நல்லை திரு ஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் இன்று காலை ஆரம்பமாகும் இவ்விழா நாளையும் தொடர்ந்து நடைபெறும். அமரர் ம. ஸ்ரீகாந்தா அரங்கில் மன்றத் தலைவர் திரு. த. சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும் இன்றைய விழாவில் நல்லை ஆதீன 2வது குரு மகாசந்நிதானம் திருப்பெருந் திரு-சோமசுந்தரதேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தொடக்கவுரையும், திரு. க. சொக்கலிங்கம் வரவேற்புரையும் நிகழ்த்துவர். யாழ். இந்து மகளிர் மாணவிகள் திருமுறை ஓதுவர். இன்றைய மற்றும் நிகழ்ச்சிகள் வருமாறு:

காலை 9-00 மணி பூசையும் ஆராதனையும், 9-30 திருமுறை ஓதல்-அண்ணாமலை இசைக்கலை மன்றம். முற்பகல் 10-30 சேக்கிழார் புராணம் புராண படனம் - திருவாளர்கள் மு. சதாசிவம், நா. கனகரத்தினம், மு. தியாகராஜா, சி. அம்பலவாணர். பகல் 12-30 மாகேஸ்வர பூசை, மாலை 4-30 மணி சேக்கிழார் சுவாமிகள் திருவுருவம் ஆதீனத் திருக்கோயிலிலிருந்து எழுந்தருளி வீதிவலம் வருதல். சொற்பொழிவு மாலை 6-00-7-30 திரு ச. விநாயகமூர்த்தி, 7-30-9-00 திரு த. அகரமுதல்வன். நன்றியுரை திரு. சு, பரநிருபசிங்கம். (அ)

## திருமுறை விழா

[கரவெட்டி]

நெல்லியடி இந்து இளைஞர் மன்றம் நடாத்தும் 5வது திருமுறை விழா அடுத்த மாதம் 11ம் திகதி நெல்லியடி தடங்கன்புளியடி முருகமூர்த்தி ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது. வித்துவான் பொன். சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் சிறப்புச் சொற்பொழிவு வழக்காடுமன்றம் உட்பட பல நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

## கைப்பணிக் காட்சி

(அரியாலை)

யாழ், மாவட்டச் சாரணர் கிளைச் சங்கங்கள் நடாத்தும் உலக சாரணர் 75வது வருடப் பூர்த்தி விழாவும், கைப்பணிக் காட்சியும் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் இன்றும், நாளையும் நடைபெறவிருக்கின்றது.

சாரணர்களின் மரத்தில் குடிசைகள் அமைத்தல், பாலங்கள் அமைத்தல், தேகப் பயிற்சிகள், முதலுதவிச் சிகிச்சைகள் ஆகிய நிகழ்ச்சிகளும், திரைப்படக் காட்சியும் நடைபெறும். (இ)

## பறுபதபத்தினி ஆலய உற்சவம்

[யாழ்ப்பாணம்]

உரும்பராய் பறுபதபத்தினி அம்மன்கோவில் வருடாந்த மகோர்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துதினங்களுக்கு நடைபெறவிருக்கிறது. 5ம் திகதி தேரோற்சவமும். 6ம் திகதி தீர்த்தோற்சவமும் இடம் பெறவிருக்கின்றன.

உர்சவநாட்களில் செல்வி ஸ்ரீ மனோ ரி ணேசசுந்தரம் தினமும் கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார். [கி]

## மினிபஸ் மோதியது

(சங்கானை)

சங்கானை மக்கள் வங்கிக்குச் சமீபமாக பொன்னாலை-யாழ்ப்பாணம் வீதியில் யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகர் சென்று கொண்டிருந்த மினிபஸ் வீதிவழிபாக சென்று கொண்டிருந்த ஒருவரை மோதியதில் காயமடைந்த பாதசாரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## பாரத. .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இதன் பயனாக ஆரம்பிக்கப்பட்ட இயக்கமே கூட்டுச்சேரா நாடுகள் இயக்கமாகும். பெரும் தலைவர்களான முன்னாள் யூகோஸ்லாவியஜனாதிபதி மார்ஷல் டிட்டோ, முன்னாள் எகிப்திய ஜனாதிபதி நாஸர் ஆகியோருடன் இணைந்து கூட்டுச்சேரா நாடுகளின் நலன் கருதி பல சிறந்த கருத்துக்களை முன்வைத்தார்,

ஜவஹர்லால்நேரு மறைந்த இன்றுடன் 18 வருடங்கள் கழிந்துவிட்டபோதிலும் அவர் காட்டிச்சென்ற பாதை இன்றும் ஒளி நிரம்பியதாகவும் இளமையானதாகவும் காணப்படுகின்றது,

நேருஜியின் 1961ம் ஆண்டு ஐ. நா. ஸ்தாபன உரையில் அவர் உலக மக்களை நோக்கி ''எலிகளைப்போல நிலத்தில் வளைகளை அமைத்துப் பதுங்கியிராது உங்களை சூழ்ந்திருக்கும் கஷ்டங்களை அகற்ற முன்வாருங்கள்'' என்று விடுத்த அழைப்பு இன்றும்விடிவற்றுத் தவிக்கும் மக்களுக்கு ஒரு தளபதியின் கட்டளையாகவேவிளங்குகின்றது,

# அம்பிகைக்கு ஒரு மண்டபம்

திருவருட் சக்தியாகிய இறைவி பர்வதபத்தினி அம்பாள் என்னும் திருநாமத்துடன் பல்வகைச் செல்வங்களும் நிரம்பிய உரும்பராய்ப் பதியின் மேற்குத் திசையில் கோயில் கொண்டு எழுந்தருளி வழிபடும் அடியார்களின் துயர் துடைத்து அருள் மழை பொழிகின்றாள். அம்பாளின் பெருமைகளோ அநந்தம், அம்பாளின் திருவடியே சரணம் என்று தவமிருந்து உய்தி பெற்றோர் அநேகர். உரும்பராய் பர்வதபத்தினி அம்மன் ஆலய நவராத்திரி விழாக்கள், ஆடிப்பூரஉற்சவம், மகோற்சவம் என்றின்னோ ரன்னவை பக்தி பூர்வமாக நடப்பவை. பங்குனித் திங்கள் நாட்களில் அடியார்கள் ஆலயத்தில் முகாமிட்டிருந்து பொங்கல் பூசைகளை நடத்தி வழிபடும் காட்சி வெகு அற்புதமாயிருக்கும் இறுதித் திங்களில் பஞ்சபட சர்ப்ப வாகனத்தில் பர்வபத்தினி அம்பாள் எழுந்தருளும் திருக்கோலக்காட்சி அடியார்களை மெய்சிலிர்க்கவைத்து விடும்.

பழைமையும் பெருமையும் வாய்ந்த இத்திருக்கோயிலில் அடியார்கள் வசதியாக நின்று வழிபடுவதற்கு வாய்ப்பாக உள்வீதியில் மண்டபங்களை அமைத்தாலோ என்ற ஓர் ஆசை பலரிடமும் தோன்றியது, குறித்த ஆசை நிறைவு பெறக்கை கொடுத்தார் மலேசியாவில் கோலாலம்பூர் நகரத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் திரு. மார்க்கண்டு செல்லத்துரை.



தமது பெற்றோரான மார்க்கண்டு - தெய்வானையம்மை தம்பதியர்க்கு பழைமையும் பெருமை வாய்ந்த கருணாகரப் பிள்ளையார் குலதெய்வம். பர்வதபத்தினி அம்பாள் வாழ்வளித்த தெய்வம் என்று அடிக்கடி கூறிவரும் திரு. செல்லத்துரை இளமையிலேயே மலேசியா நாடு சென்று உயர்தர உத்தியோகங்களை வகித்துப் பேரும் புகழும் பெற்றவர் இவரது உத்தியோக சேவையின் உயர்வுகண்டு அந்தநாட்டு அரசு எ. எம். என். என்ற சிறப்புப்பட்டத்தை வழங்கிக்கௌரவித்தது.

இப் பெரியார் பெற்றதாயும் பிறந்த பொன்நாடும் நற்றவவானினும் நனி சிறந்தனவே என்ற கூற்றுக்கு அமைவாக இருந்தார். மலேசியா நாட்டில் வாழ்ந்த போதிலும் தான் பிறந்த உரும்பராய் மண்ணை மனதார நேசித்து வருகின்றார்.

தான் பக்தி செலுத்தும் பர்வத அம்பாள் ஆலயத்தில் தக்கதொரு திருப்பணியைச் செய்யவேண்டுமென்று விரும்பினார். அவரது விருப்பம் பல வர்ண சித்திர வேலைப்பாடுகளுடன் கூடிய உள்வீதி மண்டபமாகப் பர்வதபத்தினி அம்மன் திருக்கோயிலில் மலர்ந்துள்ளது. இம்மண்டபத்தை யாழ். பல்கலைக்கழகத்தலைவர் பேராசிரியர் கலாநிதி ஸ்ரீ. கா. கைலாசநாதக்குருக்கள் மங்கள விளக்கேற்றித் திறந்து வைக்கிறார்.

அ. பஞ்சாட்சரம்

## கடலுக்கடியில் மாபெரும் நீர்வீழ்ச்சி

மாஸ்கோ மே 26

உலகத்தின் மிகப் பெரிய ''நீர் வீழ்ச்சி'' ஒன்று ஆர்ச்டிக் கடலும், அட்லாண்டிக் கடலும் சந்திக்கும் இடத்தில் (கடலுக்கு அடியில்) இருப்பதாக லெனின்கிராடில் உள்ள ஆர்க்டிக் - அன்டார்டிக் கடலியல் ஆராய்ச்சிக் கழக விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கின்றனர். ஆர்க்டிக் கடலுக்கு எல்லையாக விளங்கும் ''கிரீன் லாந்து ஸ்காட்லாந்து ஆர்க்'' எனப்படும் தீவுக் கட்டத்தருகே இந்த நீர் வீழ்ச்சி உள்ளது. ஆர்க்டிக் பகுதியிலிருந்து வரும் குளிர்ந்த நீர் அட்லாண்டிக் மாகடலில் 3000 மீட்டர் பள்ளத்தில் வீழ்கிறது. இங்கு பாயும் தண்ணீர் அளவையும் விட இது அதிகமாகும்.

அட்லாண்டிக் மாகடலில் அதன் தென்கோடி எல்லை வரை உள்ள நீரோட்டம் முழுவதையுமே இந்த நீர் வீழ்ச்சி பாதிப்பதாகத் கடல் இயல் நிபுணர்கள் கருதுகின்றனர். ஒட்சிசன் வாயு அதிகம் கலந்துள்ள ஆர்க்டிக் கடல் நீர் பாய்ந்து எந்நேரமும் அட்லாண்டிக் கடல் நீரைப் புதுப்பித்துக் கொண்டேயிருக்கிறது.

## இன்று சங்காபிஷேகம்

[வட்டுக்கோட்டை]

சங்கரத்தை பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திர சுவாமி கோவில் சங்காபிஷேகம் இன்று வியாழக்கிழமை பகல் நடைபெறுகின்றது. இரவு மேளக்கச்சேரி, கதாப்பிரசங்கம், இன்னிசை நடைபெற்றபின் அம்பாள் பூந்தண்டிகையில் வீதிவலம் வருவார்.

## இன்று திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் பார்வதபத்தினி அம்மன் கோவில் புதிய மண்டபத் திறப்புவிழா இன்று மாலை நடைபெறவுள்ளது. (உ)

## பட்டதாரிகள் ஒன்றியம் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகமாணவர்களின் கோரிக்கையை ஆதரித்து யாழ். பல்கலைச்கழக பட்டதாரிகள் ஒன்றியமும் அறிக்கைவிடுத்துள்ளது, (மா)

## வவுனியாவில் தேர்தல் பிரசாரம்

(வவுனியா)

வவுனியாவில் தேர்தல் சம்பந்தமான கருத்தரங்களும் ஆலோசனைக் கூட்டங்களும் பரவலாகக் நடைபெற்று வருகின்றன. தமிழீழவிடுதலை அணி தேர்தல் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. [அ]


உங்கள் பணத்திற்கு....
27%
வட்டி...



சிறந்த பாதுகாப்பு வருமானம் உத்தரவாதம்

25% 2 வருட வைப்புப்பணத்திற்கான கால முதிர்வு வட்டி...
23% 2 வருட வைப்புப்பணத்திற்கான மாதாந்த வட்டி...
21% 1 வருட வைப்புப்பணத்திற்கான மாதாந்த வட்டி...

மகாராஜா முதலீட்டு (வரையறுக்கப்பட்ட) நிதிநிறுவனம்
122, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 8267

கவர்ச்சிகரமான வட்டி விகிதங்கள் 27% வரையுண்டு

| | ரூ 500க்கு அதிகமான வைப்புக்கு மாதாந்தம் வட்டி | ரூ 500க்கு அதிகமான வைப்புக்கு காலமுதிர்வு வட்டி | 1,00,000 ரூபாய்க்கு அதிகமான தொகைக்கு கால முதிர்வின்போது |
|---|---|---|---|
| 6 மாதம் | — | 18% | 21% |
| 12 மாதம் | 21% | 22% | 23% |
| 24 மாதம் | 23% | 25% | 27% |

சுருக்கமான தகவல்கள்

| நிதி அறிக்கை | 1977/78 ரூபாய் | 1978/79 ரூபாய் | 1979/80 ரூபாய் |
|---|---|---|---|
| பங்கு மூலதனம் | 4,030 | 250,000 | 250 000 |
| ஒதுக்கிய மூலதனம் | 143,588 | 246,615 | 1 706 147 |
| வைப்பு மூலதனம் | 3,579,820 | [illegible] 325,480 | 12,139,162 |
| நிகரலாபம் (வரிகட்ட முன்) | 181,417 | 661 461 | 2,135,874 |
| நிகரலாபம் (வரிகட்டிய பின) | 163,916 | 453,777 | 1 635,873 |
| பங்குலாபம் | — | 250,000 | 187,500 |

இயக்குனர்கள்
1. திரு. ஆர். மகாராஜா (நிர்வாக இயக்குனர்)
2. திரு. ஆர். இராஜமகேந்திரன் (நிர்வாக இயக்குனர்)
3. திரு. வி. என் குமாரசாமி, F.C.A (Eng. & Wales), ATII (Eng.) M.Inst A.M (Eng.). AMBIM(Eng ). F.C A.(Cey )
4. திரு. பி. மகிந்தா B. Sc. (Hons)
5. திரு. வி. சண்முகம் LLB (Lond) Hons A I B (Lond) சட்டத்தரணி
6. திரு. டி ஜே. குணவர்த்தன B.Sc., A.C.A. A.C.M.A
7. திரு. டபிளயு. பலநாயக்கா MBIM (Eng.)
8. திரு. ஈ. குணசேகரா

வியாபார நோக்கங்கள்
★ முதலீட்டு வைப்பு
★ கைத்தொழிலாளர்களுக்கு, இயந்திராதிகள், மூலப்பொருள் இறக்குமதிக்கு கடன்வசதி
★ காப்புறுதி முகவர்.

ஸ்தாபகம்: 29-09-1976.
தலைமையகம்: யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
காரியாலயம்: 54. பாங்ஷால் வீதி, கொழும்பு.

''சிறிமாவுக்கு குடியுரிமை வழங்கினுல்

# எனது குடியுரிமையையும் இழக்க வேண்டிய நிலை ஏற்படலாம்''

## பொதுக் கூட்டத்தில் ஜனுதிபதி

[கொழும்பு]

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடி உரிமையை அரசு பறிக்கவில்லை நீதிமன்ற தீர்ப்பின்படியே அவர் குடியுரிமையை இழந்தார். ஆட்சியிலிருந்தபோது சில குற்றங்கள் புரிந்ததனுல் அவர் தண்டனையைப் பெற்ருர் அவருக்கு மீண்டும் நான் குடியுரிமையை வழங்கினுல், குடியுரிமையை வழங்கிய குற்றத்திற்காக நானும் குடியுரிமையை இழக்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

கொழும்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய ஜனுதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனு மேற்கண்டவறு கூறினுர்.

இக் கூட்டத்தில் பிரதமர் ஆர். பிரேமதாசாவும் கலந்து கொண்டார்.

ஜனுதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனு மேலும் கூறியதாவது. ''எஸ் டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா, ஆர். ஜே. சேனநாயக்கா, கே. எம். பி. ராஜரத்தினு ஆகியோர் இனவாத பிரச்னையைக் கிளப்பி ஆள முயற்சி செய்தார்கள். அவர்கள் முயற்சி அதிக காலம் நீடிக்கவில்லை.

சிங்களம், தமிழுக்கு சம அந்தஸ்து வழங்குவதாக 1951ல் சுதந்திரக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது பின் 56ல் அந்த வாக்குறுதி காற்றில் பறக்க விடப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சி இன மத வேறுபாடின்றி எல்லோரையும் ஒரே மாதிரி நடாத்திவருகிறது.

1977ம் ஆண்டு நாம் ஆட்சிக்கு வந்த பின்தான் அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன மக்கள் சுதந்திரமாக வாழ்கிருர்கள். பொருட்கள் தட்டுப்பாடின்றி கிடைக்கிறது.

பிரதமர் ஆர். பிரேமதாசா கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்கா ஆகியோரும் பேசினுர்கள். (க)

## பனம்பொருள் பயிற்சி நிலையம்

(மன்னுர்)

மன்னுர் – புத்திரகண்டான் கிராமத்தில் நானுட்டான் ப. நோ. கூ. சங்கததினுல் ஆரம்பித்து வைக்கப்பட்ட மகளிர் பனம்பொருள் உற்பத்தி பயிற்சி நிலையத்தை அகில இலங்கை தேசியக் கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு கோகுலகம திறந்துவைத்தார்.

இவ் வைபவத்தில் மன்னுர் மாவட்ட அபிவிருத்தி சபைக் தலைவர் திரு. பி. எம். செபமாலை, மனனுர் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. எஸ் தில்லைநடராசா, அகில இலங்கை தேசிய கூட்டுறவு சபை பிரதித் தலைவர் திரு. இராசநாயகம், நானுட்டான் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். அமிர்தலிங்கம், மன்னுர் மாவட்ட மகளிர்குழுத் தலைவி செல்வி பாக்கியம் சின்னத்தம்பி ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

## பத்மநாதன் காலமானுர்

[யாழ்ப்பாணம்]

அரசாங்க எழுதுவினைஞர் சங்க முன்னுள் துணைச் செயலாளரும் தமிழர் சுயாட்சிக் கழகப் பிரமுகருமான திரு .க. பத்மநாதன் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாண அரசினர் வைத்தியசாலையில் காலமானுர்.

சிறிது காலமாக நோய்வாய்ப்பட்டிருந்த திரு. பத்மநாதன் சிங்களம் படிக்க மறுத்த காரணத்தினல் அரசாங்க சேவையிலிருந்து 1969–இல் பதவிநீக்கம் செய்யப்பட்டார். அரசாங்க எழுதுவினைஞர் சங்க நடவடிக்கைகளில் முன்னின்று உழைத்த இவர் அச்சங்கத்தின் பத்திரிகையான ''எழுச்சி'' யின் ஆசிரியராகவும் பணிபுரிந்தார்.

## நாசம் செய்யும் ஏவுகணைகள்

லண்டன், மே 26

போக்லண்ட் தீவுகளில ஆர்ஜென்டீனுவுடன் கடும் யுத்தத்திலீடுபட்டுவரும் பிரிட்டன், விமானங்களை நாசம் செய்யும் ஏவுகணைகளை மேற்கு ஜெர்மனியிலிருந்து தருவிப்பதாக அறிவிக்கப்பட்டது. [வெ]

## மேற்கு வங்காள அமைச்சரவை

புதுடில்லி மே. 26

மேற்கு வங்காளத்தில் திரு. ஜோதிபாசு தலைமையிலான இடதுசாரி முன்னணி அமைச்சரவை இன்று பதவியேற்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. [வெ]

## மூன்று

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பாரதம்

யோசனை

போக்லண்டில் யுத்தத்தை நிறுத்துமாறு பிரிட்டனையும், ஆர்ஜென்டீனுவையும் கேட்டுக்கொள்ளும் விண்ணப்பமொன்றை ஐ. நா. பந்தோபஸ்து சபையில் பாரதம் சமர்ப்பித்துள்ளது.

போக்லண்ட் பிரச்னையை பேச்சுவார்த்தைமூலம் சமாதானமாக தீர்த்துக் கொள்ளுமாறு ஐ. நா. பாதுகாப்பு சபையில் பாரதப் பிரதிநிதி திரு. என். கிருஷ்ணன் கேட்டுக்கொண்டார்.

இவ் விடயத்தில் ஐ நா. தலைமைப்பீடத்தை வலுப்படுத்த வேண்டும் என்றும் அமைதியான பேச்சுவார்த்தை மூலமே தீர்வுகாண வேண்டும் என்றும் அவர் மேலும் பேசுகையில் தெரிவித்தார்.

இப் பிரதேசத்தில் பதட்டநிலையை, பெரிதாக்காமல் இருப்பதே முக்கியமென்றும், அவர் தெரிவித்தார். [க]

# முன்னுள் யாழ்.எம்.எம்.சி நடராசா விபத்தில் மரணம்

(நல்லூர்)

பிரபல ஆயுர்வேத வைத்தியரும் நீண்டகாலமாக யாழ் மாநகரசபையின் உறுப்பினராயிருந்தவருமான திரு. அரசபிள்ளை நடராசா விபத்தொன்றில் சிக்கிமரணமானுர்,

நேற்றுமுன்தினம் நல்லூர் பருத்தித்துறை வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் சைக்கிளில்சென்ற வைத்தியர் நடராசா படுகாயமுற்ருர். உடனடியாகவே யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு தலையில் சத்திர சிகிச்சை செய்யப்பட்டபோதிலும் நேற்றுக் காலை அவர் மரணமானுர்.

இவரது மரணம் தொடர்பாக விசாரணைகளை யாழ். திடீர்மரண விசாரணை அதிகாரி திரு, எஸ். எஸ். பிரான்சிஸ் நடத்தினுர்.

## மாலை தீவு விண்ணப்பம்

லண்டன் மே. 26

மாலைதீவு பொதுநலஅமைப்பில் சேருவதற்கு உத்தியோகபூர்வமாக விண்ணப்பம் செய்துள்ளது. மாலைதீவு ஜனுதிபதி லண்டனுக்கு விஜயமொன்றை மேற்கொண்டு திரும்பிய பின்னர் இவ் விண்ணப்பம் செய்யப்பட்டது. (க)

## பிரிட்டிஷ்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பேட்டி கண்டனர். அப்போது அவர் தமது காயம் தற்போது சுகமடைந்து வருவதாகத் தெரிவித்ததுடன், பிரிட்டிஷ் வைத்தியம் குறித்தும் திருப்தி தெரிவித்தார். (கி)


# ட்ரைகோ நிறுவனம் அதன் இரண்டாவது சர்வதேச அலுவலகத்தை மேற்கு ஜெர்மனியில் திறந்துள்ளது

வாடிக்கையாளரின் உறுதியான ஆதரவு அதிகரித்துள்ளமையால் ட்ரைக்கோ நிறுவனம் அதன் இரண்டாவது சர்வதேச அலுவலகத்தை மேற்கு ஜெர்மனியில் ஹம்பேர்க்கில் திறந்துள்ளது.

இந்தப் புதிய அலுவலகத்தின் மூலமும் ஏற்கெனவேயுள்ள லண்டன் கொழும்பு அலுவலகங்களின் மூலமும், வாடிக்கையாளர்கள் தங்கள் கப்பல் சரக்குகள், தவிப்பட்ட உடைமைகள், வீட்டுப் பொருட்கள், வாகனங்கள், வர்த்தகச் சரக்குகள் அனைத்தையும் வெளியே அனுப்பவோ அல்லது உள்ளே கொண்டுவரவோ வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

லண்டனிலும் ஹம்பேர்கிலும் உள்ள எமது அலுவலகங்கள் ஐரோப்பாவின் எந்தப் பகுதியிலிருந்தும் பொருட்களை இலங்கை, பாகிஸ்தான், இந்தியா மற்றும் கிழக்கு நாடுகளுக்கு எடுத்துவரவும், திரும்பும்போது இந்த நாடுகளிலிருந்து ஐரோப்பாவின் எந்தப் பகுதிக்கும் எடுத்துச் செல்லவும் வசதிகளைச் செய்யும்.

பத்திரங்கள் தொடர்பான வேலைகள், வாகன வசதிகள், பெரும்பொதிகளைக் கையாளுதல் போன்ற எல்லாச் சேவைகளையும் கொழும்பிலுள்ள ட்ரைக்கோ வழங்குகிறது.

சரக்குகளை எடுத்துவரவோ அல்லது எடுத்துச்செல்லவோ இன்றே எங்களுடன் தொடர்புகொள்ளுங்கள்.

Trico International Shipping & Forwarding GmbH
Neuer Bahnhofstrasse 133 2104 Hamburg 92, West Germany.
Telephone: Hamburg 7017741 Telex: 217668 Trico D

Head Office
Trico International
Stuart House River Park Road, Wood Green, London N22. U. K.
Telephone 889 6902 (4 lines) 889 7972



GRAPHIC COMMUNICATIONS

TRICO

கொழும்பு அலுவலகம்.

ட்ரைக்கோ மறிட்ரைம்

351/3, ஆர். ஏ. டீ. மெல் மாவத்தை,

கொழும்பு-3.

தொலை பேசி: 548269, 548270

வெலிங்டன்
யாழ்ப்பாணம்)
தினசரி 5 காட்சிகள்
THREE MUSKETERS
28-5-82 முதல்
லொறி ட்ரைவர்
ராஜாக்கண்ணு

லிடோ தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
எம். ஜி. ஆர்-சரோஜாதேவி
பெற்றால்தான்
பிள்ளையா
(புத்தம்புதிய பிரதி)

ராணி தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
சிவாஜி-வாணிஸ்ரீ
உயர்ந்த மனிதன்

வெஸ்லி 3-6-82 வரை
(மானிப்பாய்) தினசரி 6-15, 9-15, சனி, ஞாயிறு 2-30
கமல் - ஸ்ரீபிரியா - நம்பியார்
நீயா?
[இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி]
(கலர்)

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
ரஜனிகாந்த்—ஸ்ரீபிரியா நடித்த
பொல்லாதவன்
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
2-வது மாதமாக (இன்று மட்டும்)
ஸ்ரீ பிரியா, சுஹாசினி, கமல், ரஜனி, நாகேஷ்
நட்சத்திரம் (ஈஸ்ட்மன் கலர்)
From 28-5-82
ALL THAT JAZz

மனோகரா (யாழ்ப்பாணம்)
வெற்றி முரசுகொட்டும்
3-வது வாரம்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
மாதர்கள் கூட்டம் அலைமோதுகிறது
கார்த்திக் ராதா
தியாகராஜன் நடித்த
அலைகள் ஓய்வதில்லை
(கலர்)

ஹவுஸ் புல்... ஹவுஸ் புல்... ஹவுஸ் புல்...
10-30, 2-30, 6-15, 9-45
சாந்தி (யாழ்நகர்)
வெற்றிப்படம் 'குரு' தயாரிப்பாளர்களின்
மற்றுமோர் வெற்றிப்படைப்பு!
தென்னகத்தில் மிகுந்த பரபரப்பூட்டி காட்சியளித்த விறுவிறுப்பு மிகு வண்ணத்திரையோவியம்



கமல் (இருவேடங்கள்)
சுஜாதா, சுமன்,
தேங்காய், நாகேஷ்.
கடல் மீன்கள்
தவிர்க்கமுடியாத காரணங்களால் காட்சிகள் முன்கூட்டியே ஆரம்பிக்கப்படுவதால் ஆசனங்கட்கு முந்துங்கள்

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-30, 6-15, இரவு 9-30



பல படங்கள் போட்டிக்கு வந்தும் தொடர்ந்து வசூலில் சாதனை. பலர் டிக்கட் இன்றித் திரும்புகின்றனர். இப்படத்திற்கு மாதர்கூட்டம் அலைமோதுவதால் உங்கள் டிக்கட்டுக்கு முந்துங்கள்.
ஸ்ரைல் நடிகர் ரஜனிகாந் ✯ விஜயன் ✯ கராத்தே மணி ✯ சுஜாதா ✯ ரதி
அன்புக்கு நான் அடிமை
[ஈஸ்மன் கலர்]


# மாணவர் போராட்டம்!

# ஆசிரிய சங்கமும் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக வளவில் உண்ணாவிரதமிருந்த பல்கலைக் கழக மாணவர்களை கம்யூனிஸ்ட் கட்சியின் கலவான எம். பி. திரு. சரத் முத்தெட்டுவேகம, முன்னாள் எம். பி. திரு. எம். சி. சுப்பிரமணியத்துடன் சென்று முன்தினம் பார்வையிட்டார்.

யாழ். பல்கலைக் கழக மாணவர் அவைத்தலைவர் திரு கே. என். இராசநாயகத்தை, திரு சரத் முத்தெட்டுவேகம சிறிது நேரம் சந்தித்து உரையாடினார்.

''பல்கலைக் கழக விஞ்ஞான பீட மாணவன் திரு. அ. விமலராசா எதுவித விசாரணையுமின்றி 400 நாட்களாக இராணுவ தடுப்புக்காவலில் இருக்கிறார். அவரின் நலன் குறித்து சென்ற 12ம் திகதி தொடக்கம் வகுப்புகளைப் பகிஷ்கரித்து வந்தும், ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்தியும் எதுவித பலனும் இல்லை. கடந்த திங்கட்கிழமை தொடக்கம் உண்ணாவிரதம் மேற்கொண்டோம். எங்கள் கோரிக்கைகளை தென்னிலங்கையிலுள்ள சிங்கள மக்கள் மத்தியிலும், பல்கலைக்கழகங்கள், மற்றும் பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் எடுத்துக் கூறுவதுடன், பாராளுமன்றத்திலும் இப்பிரச்னைகளைப் கிளப்ப வேண்டும்'' என்று மாணவர் அவைத் தலைவர் கேட்டுக்கொண்டார்.

முடிந்தளவு இப் பிரச்னையைத்தான் எடுத்துக் கூறுவதாக உறுதியளித்த கலவான எம். பி., இது சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகளை அனுப்பி வைக்குமபடியும் கூறினார்.

நவ சமஜமாசக் கட்சியின் வட பிரதேசத் தலைவர் திரு அ. அண்ணாமலையும், உண்ணாவிரதமிருந்த மாணவர்களைச் சந்தித்து உரையாடினார்.

## ஆசிரியர் சங்கம் தீர்மானம்

''400 நாட்களுக்கு மேலாக எவ்வித விசாரணையுமின்றி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பல்கலைக் கழக மாணவன் விமலராசாவை விடுதலைசெய்ய வேண்டும் அல்லது நீதிமன்ற விசாரணைக்குட்படுத்த வேண்டும்'' என்னும் தீர்மானத்தை யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் நிறைவேற்றியுள்ளது.


யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்க விசேட கூட்டம் சங்கத் தலைவர் கலாநிதி வி. நித்தியானந்தன் தலைமையில் நடைபெற்றபோது மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

''விமலராசாவின் நலன்கருதிப் போராடும் மாணவர்களைக் கைதுசெய்வதையோ, துன்புறுத்துவதையோ நிறுத்த வேண்டுமென்றும் அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தீர்மானத்தின் பிரதிகள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைப்பதெனவும் முடிவுசெய்யப்பட்டது

## மாணவர்கள் உப வேந்தர் சந்திப்பு

உண்ணாவிரதமிருக்கும் யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் பிரச்னை குறித்து உப வேந்தர் சு. வித்தியானந்தன், யாழ். பல்கலைக்கழக மாணவர் அவைத் தலைவர் திரு. கே. என். இராசநாயகம், மாணவர் அவை நடவடிக்கைக் குழுத் தலைவர் எஸ். ஸ்ரீஸ்கந்தராசா, செயலாளர் ஸ்ரீசற்குணராசா ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தினர். (மா)



யாழ் நகரில் தேசிய லொத்தர்சபையின் சீட்டிழுப்பு பரிசுப் பொருட்களின் காட்சிக்கூடத்தை வடபிராந்திய போக்குவரத்துசபைத் தலைவர் திரு எஸ். கனகரத்தினம் திறந்துவைத்து விற்பனையை ஆரம்பித்துவைப்பதற்கான முதலாவது சீட்டை திரு செ. சிவஞானத்திடமிருந்து பெறுவதை இங்கு காணலாம். இவ் வைபவத்தில் தேசிய லொத்தர்சபையின் வடபிராந்திய விற்பனை அதிகாரி திரு. எஸ். செல்வரத்தினம், யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச்சங்க கணக்காளர் திரு. செ. அருளம்பலம் ஆகியோரும் சமூகமளித்திருந்தனர்.

## லொறி விபத்து இருவர் பலி

சென்னை, மே 26

திருச்சிக்கருகில் நடந்த லொறிவிபத்தொன்றில் இருவர் பலியானார்கள். (க)

## வளர்முக நாடுகளுக்கு உதவி

லண்டன் மே. 26

நிதிநெருக்கடி காரணமாக ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாமலிருக்கும் வளர்முக நாடுகளுக்கு சர்வதேச ஒலிம்பிக்குழு 40 லட்சம் டொலரை வழங்க முடிவு செய்துள்ளது. இந்நாடுகள் 1984 நடக்கும் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கு பற்றும். (க)

## முருகமூர்த்தி ஆலய உற்சவம்

(சங்கானை)

சங்கானை வெல்வில் முருகமூர்த்தி கோவில் வருடாந்த மகோற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெற்று அடுத்த மாதம் 3ம் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது.


றீகல் [யாழ். நகர்]
தினசரி 10-30, 2-15, 4-30, 7-00, 9-30
The Car

கடைசி வாரம்
ஹரன் யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த், மாதவி
தேங்காய் சீனிவாசன்
தில்லுமுல்லு


''எல்லைகளில் தமிழரை குடியேற்றாமல்

# திட்டமிட்ட சிங்களகுடியேற்றம் எனக்கூக்குரலிடுவதால் பயனில்லை''

- அமைச்சர் தேவா

(மட்டக்களப்பு)

''எல்லைக்கிராமங்களில் தமிழர்களை குடியேற்றாமல், திட்டமிட்ட குடியேற்றம் என்று கூக்குரலிடுவதால் எவ்வித பயனும் ஏற்படப்போவதில்லை.''

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி சபை கூட்டத்தில் பேசிய உள்நாட் அலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் தேவநாயகம் மேலும் கூறியதாவது,

எல்லைக்கிராமங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தைத் தடுப்பதற்கும், அத்துமீறிய குடியேற்றத்தையும் தடுப்பதற்கு தமிழ் பிரதேச எல்லைக் கிராமங்களில் தமிழ் மக்கள்சென்று குடியேறவேண்டும். அப்பகுதியில் தமிழ் மக்களை குடியேற்றாமல் இருந்துவிட்டு பேச்சளவில் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றம் நடக்கிறது என பெரிதாக குரல் எழுப்புவதில் பிரயோசனம் இல்லை. கல்லோயா பகுதியில் தமிழ் மக்களை குடியேறுமாறு கூறினேன். தமிழர் யாருமே செல்லவில்லை. சிங்கள மக்கள் குடியேறினார்கள், அதன் பின் குடியேற்றம் நடந்துவிட்டதாக குரல் கொடுப்பதில் என்ன பிரயோசனம்? முதலில் நீங்கள் தமிழ்மக்களை அங்கு குடியேற்றுங்கள்.

மட்டு. மாவட்டசபைத் தலைவர், திரு. சம்பந்தமூர்த்தி தலைமையில் ஆரம்பமான மாவட்டசபைக்கூட்டத்தி பட்டிருப்பு தொகுதியிலுள்ள எல்லைக்கிராமங்களில் அத்துமீறிக் குடியேறி இருப்பவர்கள் பட்டியல் தயாரிக்கப்பட்டு காணி பெறத் தகுதியற்றவர்களை வெளியேற்றவேண்டும் என்று பட்டிருப்பு எம். பி. திரு. பூ. கணேசலிங்கம் பிரேரணை ஒன்றை கொண்டுவந்தார். இப்பிரேரணைமீது உரை நிகழ்த்துகையிலேயே அமைச்சர் தேவநாயகம் மேற்கண்டவாறுதெரிவித்தார். (க)

## சொத்துக்களை இழக்கும் தொழிலாளர்கட்சி

சிங்கப்பூர், மே 25

சிங்கப்பூரின் ஒரேயொரு எதிர்க்கட்சி அங்கத்தவரான திரு ஜெயரத்தினம் தலைமை தாங்கும் தொழிற்கட்சி அதன் சொத்துக்கள் முழுவதையும் இழக்கவேண்டிய நிலையிலுள்ளதாக அறிவிக்கப்பட்டது. [வெ]

## யார் அதிர்ஷ்டசாலிகள்!

வடபகுதி மக்கள் ஆவலுடன் எதிர் பார்த்திருந்த சின்னத்துரை அன் பிறதர்ஸ் நிறுவனம் நடாத்திய நஷனல்-சோனி தொலைக்காட்சிப்பெட்டிகள் வாங்கியோருக்கான அதிஷ்டசீட்டிழுப்புநேற்று மாலைசிறப்பாக நடைபெற்றது.

முதல் பரிசுக்குரிய அதிர்ஷ்டசாலியை யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. எஸ். நடராசாவும்; இரண்டாம் பரிசுக்குரிய அதிஷ்டசாலியை யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையாவும்; மூன்றும்பரிசுக் குரிய அதிஷ்டசாலியை சிவதர்ம வள்ளல் திரு. க. கனகராசாவும் தேர்ந்தெடுத்தனர்.

முதல் பரிசுக்குரியவர்:

**திரு. ஏ. ஜே. இம்மானுவல்,**
ஆனந்தன் வளவு, சில்லாலை, பண்டத்தரிப்பு.
பில். இல. 1111
நஷனல் ரி. வி. 15"

இரண்டாம் பரிசுக்குரியவர்:

**திரு. ரி. கே. பாலசிங்கம்**
மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை
ரசீது இல: 1155.
ஏசியா பைசிக்கிள்

மூன்றும் பரிசுக்குரியவர்:

**திரு. கே. கந்தசாமி**
'ரத்தின வாசம்', அல்லாய் தெற்கு, அல்வாய்.
ரசீது இல: 1007
நஷனல் ஹறஸ் குக்கர்

அதிஷ்டசாலிகள், அடையாள அட்டைகள் சகிதம் தம்மை அறிமுகம்செய்து ரசீதுகளைக் காட்டி பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

வைபவத்தில்கலந்து சிறப்பித்தவர்க்கு நன்றி

சகல பொருட்களையும், தரத்தில், நாணயத்தில், நம்பிக்கையுடன் வழங்கும் அபிமானம் பெற்றநிறுவனம்

**எஸ். சின்னத்துரை அன் பிறதர்ஸ்**
39, கே.கே.எஸ். வீதி
யாழ்ப்பாணம்.
போன்: 283-284


# பயங்கர ஆயுதங்களுடன் கொள்ளைக் கோஷ்டி கைது!

## இலக்கம் மாற்றிய காரும் பிடிபட்டது

(புலோலி)

துப்பாக்கிகள், வாள்கள் போன்ற பயங்கர ஆயுதங்களுடன் காரில் சென்று வீடுகளிலும் வேறு பொது இடங்களிலும் கொள்ளையடிப்பதில் ஈடுபட்டு வந்தவர்கள் என்று கருதப்படும் இளைஞர் கோஷ்டியொன்றை பருத்தித்துறை பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

கார் ஒன்றுடன் கைதுசெய்யப்பட்டுள்ள ஏழுபேர் கொண்ட மேற்படி இளைஞர் கோஷ்டியிடம் இரண்டுதுவக்குகளும் 4வாள்களும் 4 தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டுள்ளனவாம்.

கைதான ஏழு இளைஞர்களும் பருத்தித்துறைபொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுவரப்பட்டு விசாரணைக்குட்படுத்தப் பட்டுவருகின்றனர்.

சார்ஜன்ட் செனிவிரத்ன தலைமையிலான பொலிஸ் கோஷ்டியினர் தமதுஜீப்வண்டியில் நேற்று வல்லிபுரக்கோவில் பக்கமிருந்து குடத்தனை நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது பின்னால் ஒருகார் வருவதைக்கண்டு சந்தேகம் கொண்டு அதனை நிறுத்தி சோதனையிட்டனராம். காருக்குள் மேற்படி ஆயுதங்களைக் கண்டுபிடித்ததுடன் சந்தேகத்தில் காரில் இருந்த இளைஞர்களையும்கைதுசெய்தனர் காரும் கைப்பற்றப்பட்டது.

வல்லிபுரக் கோயிலுக்கும் குடத்தனைக்குமிடையிலுள்ள சந்தியில் இது நடந்தது.

சி. என். 5994 என்ற மேற்படி ஏபோர்ட்டி காரிலுள்ள இலக்கத்தின் கடைசி[94] எண்கள் கறுப்பு மையினால் மறைக்கப்பட்டிருந்ததாம்.

கடந்த சனிக்கிழமை இரவு நாகர் கோவிலில் இடம்பெற்ற தாலிக்கொடி கொள்ளையிலும் இக்கார் சம்பந்தப்பட்டுள்ளதை பொலிசார் கண்டுபிடித்துள்ளனர்.

அக்கொள்ளையில் பாதிக்கப்பட்டவர் பொலிசில் தெரிவித்திருந்த புகாரில் காரின் இலக்கம் சி. என். 599 என்று கொடுத்துள்ளார்.

கொள்ளைக் கோஷ்டியினர் தமது வசதிக்கேற்ப காரின் இலக்கத்தை அவ்வப்போது மாற்றி ஓடியுள்ளனர் என்று கருதப்படுகின்றது.


## மரண அறிவித்தல்



வைத்தியர்

**அரசபிள்ளை நடராசா (ஜே. பி.)**

சமாதான நீதிவான்

யாழ்ப்பாணம், நல்லூர், அரச வீதியைச் சேர்ந்த வைத்தியர் அரசபிள்ளை நடராசா (ஜே. பி.) சமாதான நீதிவான் அவர்கள் 26-5-1982ந் திகதியன்று அகால மரணமடைந்துவிட்டார். இவர் யாழ்ப்பாணம் மாநகர சபையின் முன்னாள் உதவி மேயரும், உறுப்பினரும் காலஞ்சென்ற விவாகப் பதிவாளர் திருமதி இலட்சுமியம்மாவின் அன்புக் கணவரும், பொரளை ஆயுர்வேத வைத்யசாலை டாக்டர் ந. விஜேஜேந்திரனினதும், இங்கிலாந்து கணேந்திரனதும், திருமதி சந்திரா சண்முகலிங்கத்தினதும் அன்புத் தந்தையும் குபிளான் கிராம சேவையாளர் திரு. ந. சண்முகலிங்கத்தினதும், திருமதி விமலா விஜேஜேந்திரனினதும், திருமதி மாலினி கணேந்திரனினதும் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற அ. சரவணமுத்து, திருமதி சிவக்கொழுந்து முத்தம்மா ஆகியோரது சகோதரனுமாவார். அன்னாரின் பூதவுடல் ஈமைக்கிரிகைகளுக்காக அன்னாரின் இல்லத்தில் இருந்து 28-5-82 வெள்ளிக்கிழமை மாலை 4-00மணிக்கு செம்மணி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். 3343



## மகாசமாதி

**நவாலியூர்க் குருமணி அம்மா**

(முருகன்)

நவாலியூர் கதிர்காம முருகன் ஆலயத்தின் தாபகரும் 'முருகன்' என அழைக்கப்படும் அருள்மிகு நவாலியூர்க்குருமணி அம்மா மகாசமாதியடைந்துள்ளார். மகா சமாதிக் கிரியைகள் இன்று (27-5-82) வியாழன் மாலை 4 மணிக்கு மேற்படி ஆலயத்தில் நிகழும்.

3341 —முருகன் அடியார்கள்.



## எமது இளைஞர்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)


சந்தித்து விளக்கினேம். உண்ணாவிரதம் முடியும்வரை பேசமுடியாதென்றும் துணைவேந்தரோடு விஷயங்களைப் பேசுமாறும் மாணவர் பேரவைத் தலைவர் கூறினார். அதன்படி இன்று காலை 10 மணிக்கு பண்டிதர் கா பொ. இரத்தினம், திரு வெ. யோகேஸ்வரன் மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு. நா. இராசேந்திரம், திரு. மாவைசேனாதிராசா, திரு. பொ. கனகசபாபதி, நல்லூர்த் தொகுதிச் செயலாளர் ஆகியோருடன், நான் பல்கலைக் கழகம் சென்றேன். துணைவேந்தரோடும், ஆசிரியர் சங்கத்தினரோடும், கல்விக்கழக உறுப்பினர்களோடும் கலந்துரையாடினேம். பேசுவதற்கு வந்த சில மாணவர்மன்ற உறுப்பினர்கள் வேறு மாணவர்களால் தடுத்து நிறுத்தப்பட்டனர். எனினும் நான் கொடுக்கவேண்டிய விளக்கங்களைக் கொடுத்து, உண்மையில் விமலராஜாவை விடுவிப்பதில் அக்கறையுள்ள மாணவர்களை எமது நடவடிக்கைகளுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்குமாறு கேட்டிருக்கின்றேம்.

### மொறட்டுவை பல்கலைக்கழக மாணவர்கள்...

இரண்டு ஆண்டுகளுக்கு முன் மொறட்டுவை பல்கலைக் கழக மாணவர்கள் சில கோரிக்கைகளை முன்வைத்து சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர். எந்தச் சிங்களத்தலைவர்களும் தலையிடவில்லை.

நானும் திரு. யோகேஸ்வரனும் சென்று மாணவர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினேம். அவர்கள் தங்கள் கோரிக்கைகளைப் பண்போடு எடுத்துச் சொன்னார்கள். அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடாத்தி மாணவர்களின் கோரிக்கைகளை வென்று கொடுத்தோம்.

நமக்குக் கிடைத்துள்ள இச் சந்தர்ப்பத்தை நாம் முழுமையாகப் பயன்படுத்துவோம்.

[மா]


## ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட்

### புதிய உல்லாச பஸ்சேவை

தினசரி மாலை 8-30 மணி கொழும்பில் இருந்து----யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 8-00 மணி யாழ்ப்பாணத்தில் இருந்து-----கொழும்புக்கு
கண்ணியமான பாதுகாப்பான பஸ்சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கற் பெறுமிடங்கள்:-

(1) ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட்
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 8310

(2) யாழ். ஐக்கிய வியாபார சங்கம்
இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 370—438—537

(3) யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 7596

(4) குயிக் ட்ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்
சரஸ்வதி கார்டின்ஸ், சேர்ச் லேன், சாவகச்சேரி.
தொலை பேசி இல; 273. சாவகச்சேரி

கொழும்பில் டிக்கற் பெறுமிடங்கள்:

(1) ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட்
இல: 463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190

(2) ரவீந்திரா ஸ்டோர்ஸ்
இல: 285, காலி வீதி, வெள்ளவத்தை.

(3) லங்கா பம்பே சுவீட் ஹவுஸ்,
இல. 105, ஒல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.
தொலைபேசி இல; 22830

(4) ஸ்ரீமணிமலர் ஸ்டோர்ஸ்
இல: 157/2, ஸ்ரீகதிரேசன் வீதி, கொழும்பு—11
தொலைபேசி இல: 23277

(5) நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
இல; 127, காலி வீதி. பம்பலப்பிட்டி.
தொலைபேசி இல:88866


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982 [illegible] மே 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81. Eelanadu—P. O. Box 49, Telegram: 'Eelanadu' T'phone; 389 and 8126.